# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com

சுற்றறிக்கை எண்:145:2016 18.06.2016

அன்பார்ந்த தோழர்களே !

## தோழர். G.காந்தி, துணைத்தலைவர்
## தோழர்.A.பொம்மன், துணைச்செயலாளர்
## பணி நிறைவுப் பாராட்டு விழா

நமது சங்கத்தின் துணைச்செயலாளர் தோழர்.**G.காந்தி** அவர்கள் 36 ஆண்டுகள் வங்கிப்பணியை நிறைவு செய்து மதுரை திருப்பரங்குன்றம் கிளையிலிருந்து வரும் ஜூன் 30ஆம் நாள் ஓய்வு பெறவுள்ளார். தோழர்.**G.காந்தி** அவர்கள் சங்கத்தின் பல்வேறு பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றியவர்.

மதுரை பிராந்தியத்திலுள்ள அனைத்துத் தோழர்களின் நலனுக்காக பணியாற்றிய தோழர்.**G.காந்தி** அவர்களது பணி நிறைவுப் பாராட்டு விழாவை நமது சங்கத்தின் சார்பில் கீழ்க்கண்டபடி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது :

**இடம் : மதுரை ராமநாதபுரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம்,**
**தோழர். பர்வானா இல்லம், 42-B, தெற்கு மாசி வீதி,**
**மதுரை - 625 001**

**நாள் : 03-07-2016 (ஞாயிற்றுக் கிழமை)**

**நேரம் : காலை 10.00 மணி**

நமது சங்கத்தின் துணைச் செயலாளர் தோழர்.**A.பொம்மன்** அவர்கள் 38 ஆண்டுகள் வங்கிப்பணியை நிறைவு செய்து திருப்பூர் கிளையிலிருந்து வரும் ஜூன் 30ஆம் நாள் ஓய்வு பெறவுள்ளார்.

கோவை பிராந்தியத்திலுள்ள அனைத்து தோழர்களின் அன்புக்குப் பாத்திரமான தோழர்.**A.பொம்மன்** அவர்களது பணி நிறைவுப் பாராட்டு

விழாவை நமது சங்கத்தின் சார்பில் கீழ்க்கண்டபடி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது :

**இடம் : ஹோட்டல் சிக்கன் சம்பூர்ணா, காமராஜர் சாலை,**
**பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பூர் - 641 604**

**நாள் : 02-07-2016 (சனிக் கிழமை)**

**நேரம் : மாலை 5.30 மணி**

மேற்கண்ட விழாக்களில் நமது வங்கி நிர்வாகத்தின் பிரதிநிதிகள், சங்கத்தின் நிர்வாகிகள், அதிகாரிகள் சங்கங்களின் தலைவர்கள், மாவட்ட வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள், சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

பொதுநலனுக்காக தங்களது உழைப்பையும், நேரத்தையும் செலவு செய்த தோழர்களை சிறப்பிப்பது தொழிற்சங்கங்களின் கடமையாகும். அதே சமயம் அந்த விழாக்களில் அதிக எண்ணிக்கையில் கலந்துகொண்டு, அந்தத் தலைவர்களுக்கு தங்களது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதும் தோழர்களின் கடமையாகும்.

நமது சங்கத்தின் அனைத்துத் தோழர்களும், தோழியர்களும் அவசியம் இந்த விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

## நகை மதிப்பீட்டாளர்கள் - சிறப்புக்கூட்டம்

தோழர்.G.காந்தி அவர்களின் பாராட்டுக்கூட்டம் முடிந்தபின், அதே அரங்கில் தமிழகத்தைச் சார்ந்த அனைத்து நகை மதிப்பீட்டாளர்களின் கூட்டம் மதியம் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

தமிழகத்தின் எல்லா பிராந்தியங்களிலும் பணியாற்றும் நகை மதிப்பீட்டாளர்கள் அனைவரும் இந்தக் கூட்டத்திலும் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுகிறோம்.